

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர்மு.க ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வாழ்த்து பெற்றார்.

செங்கோட்டை

# நித்திய கல்யாணியம்மன் கோவில் கொடை விழா தொடக்கம்

**செங்கோட்டை, மே.22-**

செங்கோட்டை அருள்தரும் ஸ்ரீ நித்தியகல்யாணி அம்மன் திருக்கோவிலில் கொடை விழா கடந்த 20ம் தேதி காலை 9.00 மணிக்கு ஹோமம் அதனைத் தொடர்ந்து 10.35 மணிக்கு மைல் கால்நாட்டு விழா, கணிப்பு கட்டு வைப்போகத்துடன் துவங்கியது.

மாலை 6.30 மணிக்கு சிற்றடியே நம் தனித்துணை என்ற தலைப்பில் செங்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளி தமிழாசிரியர் பிச்சம்மாள் இசக்கிமுத்து சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. இரவு 8.30 மணிக்கு சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனை நடந்தது இதில் செங்கோட்டை சுற்றுவட்டப் பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர். அனைவருக்கும் அருள் பிரசாரம் வழங்கப் பட்டது.இதற்கான ஏற்பாடுகளை சிவா இன்ஜினியரிங் பிரானூர் மண்டகப் படித்தார் செய்திருந்தனர்.

இதனை போன்று ஒவ்வொரு நாளும் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. இதனை தொடர்ந்து நாள்தோறும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் . இரவு பட்டிமன்றம், பரதநாட்டியம், முளைப்பாரி, பத்தர்களின் கோலாட்டம், கும்மி பாட்டு, சிறப்பு சொற்பொழிவு அபிஷேக ஆராதனைகள் என ஒவ்வொரு மண்டகபடிதார்கள் முலம் நடைபெற உள்ளது.

முக்கிய நிகழ்ச்சியான கோவில் கொடை விழாவிற்கு வரும் 26ம் செண்டை மேளம், நாதஸ்வரத்துடன் குற்றாலம் தீர்த்தம் கொண்டு வருதல் 27ம் தேதி காலை 9.00 மணிக்கு வீர கேரள விநாயகர் கோவிலிருந்து ஸ்ரீ நித்திய கல்யாணி கோவிலிக்கு பால் குடம் எடுத்து வருதல், 11 மணிக்கு குங்குமம் அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை மாலை 4மணிக்கு பொங்கலிடுல் 6.09 மணிக்கு முளைப்பாரி அக்கினி சட்டி ஊர்வலம் இரவு 7.30 மணிக்கு சந்தனக்காப்பு இரவு 10 மணிக்கு மேல் ஸ்ரீ நித்திய கல்யாணி அம்மன் சிம்ம வாகனத்தில் வாண வேடிக்கையுடன் திருவீதி உலா வருதல் 28ம் தேதி மதியம் 12மணிக்கு அன்னதானம். வரும் 3ம் தேதி இரவு சிறப்பு அபிஷேகம் அலங்காரத்துடன் இரவு புஷ்பாஞ்சலி விழா முடிவில் ஒவ்வொரு நாளும் பத்தர்களுகக்கு அருள் பிரசாரம் வழங்கப் படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை மண்டகபடிதார்கள் விழா கமிட்டியினர் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்து வருகின்றனர்.

# காவல்துறை பணியில் 25 ஆண்டு நிறைவு செய்த காவல் ஆய்வாளர் ஆடிவேல்



**கடையநல்லூர் மே.22:**

கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ஆடிவேல் காவல் துறை பணியில் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா கடையநல்லூர் காவல் நிலையத்தில் அக்ஷயபாத்திரம் அறக்கட்டளை சார்பாக கொண்டாடப்பட்டது.

காவல்துறை பணியில் களங்கமில்லா புகழ் பெற்று, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்று, காவல்துறையில் 25 ஆண்டுகள் நிறைவுற்று, 26 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் காக்கிச் சட்டையின் கம்பீரம் காவல் ஆய்வாளர்

ஆடிவேல் பணி மென்மேலும் சிறக்க அக்ஷயபாத்திரம் அறக்கட்டளை சார்பாக வாழ்த்துகிறோம்.இந்நிகழ்ச்சியில் ஆடிவேல், அக்ஷயபாத்திரம் அறக்கட்டளை நிறுவனர் ராமர்,நிர்வாகிகள் சக்திவேல், அருணாச்சலம், ராமர், சூர்யா, ஆகியோர் கலந்து கொண்டு நினைவுப்பரிசு வழங்கினார்.

கோவில்பட்டியில்

# காங்கிரஸ் சார்பில் ராஜீவ் காந்தி 34-வது நினைவு தினம் அனுசரிப்பு



**கோவில்பட்டி மே 22**

கோவில்பட்டி காந்தி மண்டபத்தில் வைத்து மறைந்த முன்னாள் பாரத பிரதமர் ராஜுவ்காந்தி அவர்களின் 34வது நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கோவில்பட்டி நகர காங்கிரஸ் சார்பில் மாலை அணிவித்தும் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்பு பயங்கரவாத எதிர்ப்பு உறுதி மொழி எடுக்கப்பட்டது. இதில் நகர தலைவர் கே டி பி. அருண்பாண்டியன், மாவட்ட துணை தலைவர் அய்யலுசாமி, ஆகியோர் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர்கள் பிரேம் குமார், காமராஜ் மாவட்ட செயலாளர் துரை ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் பி சி சி. உறுப்பினர்கள் உமா சங்கர், திருப்பதி ராஜா, மாவட்ட பொது செயலாளர்கள் சண்முகராஜா, சுந்தர் ராஜ், சிவப்பிரகாசம், சமூக ஊடக பிரிவு மாவட்ட தலைவர் ராஜாசேகர் மாவட்ட சிறுபான்மையினரின் பிரிவு தலைவர் அருள்தாஸ், ஆழ்வார்சாமி, பழனி சாமி, ஆல்வின், முருகன், வேல் சாமி, கிழக்கு வட்டார தலைவர்மரியா சூசை ராஜ், தர்மர், ஆனந்த், கண்ணன், மேலும் காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்தில்

# அங்கன்வாடி உதவியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் : கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

**தென்காசி மே.22**

தென்காசி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சி பணிகள் திட்ட அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆலங்குளம் வட்டாரத்தில் உள்ள குழந்தைகள் மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் காலிப் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தகவல்.



ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம், தென்காசி மாவட்ட திட்ட அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆலங்குளம் வட்டாரத்தில் உள்ள குழந்தைகள் மையங்களில் காலியாக உள்ள 3 அங்கன்வாடி உதவியாளர்கள் காலிப் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளது.தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் வட்டாரம் நேரடி நியமனம் செய்யபடவுள்ள அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் இனசுழற்சி விவரம் மாவட்ட திட்ட அலுவலகத்திலும், ஆலங்குளம் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக தகவல் பலகையில் ஒட்டப்படும். விண்ணப்பங்களை www.icds.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

மேலும் விண்ணப்பங்கள் 21.05.2025 முதல் 03.06.2025 வரை காலிப் பணியிடங்களுக்கு 10 அலுவலக வேலை நாள்களுக்குள் (அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக) விண்ணப்பிக் கவேண்டும்.

தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்படும் அங்கன்வாடி உதவியாளர்கள் தொடர்ந்து பன்னிரெண்டு மாத காலம் பணியினை முடித்த பின் சிறப்பு கால முறை ஊதியத்தின் கீழ் ஊதியம் பெறுவர்.தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு- ரூ.4100/- பன்னிரெண்டு மாத காலத்திற்கு பின் வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் மாதம்ஒன்றுக்கு ரூ.4100 – 12500 என்ற விகிதம் இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். 10-ஆம் வகுப்பு தேர்ச்சி. தமிழ் சரளமாக எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.வயது நிர்ணயம் அறிவிப்பு வெளியிட்ட மாதத்தின் முதல் நாளின் படி கணக்கிடப்பட வேண்டும்,20 வயது முதல் 40 வயது வரை,

விதவைகள் / ஆதரவற்ற பெண்கள்/ எஸ்சி/ எஸ்டி வகுப்பினர் : வயது 20 முதல் 45 வயது வரை மாற்றுத் திறனாளிகளுக்கு: 20 வயது முதல் 43 வயது வரை (40+3=43) காலிப்பணியிடங்களை நிரப்ப விண்ணப்பதாரர் அறிவிக்கப் பட்டுள்ள கிராமங்களில் உள்ள குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே கிராமத்தைச் சேர்ந்தவர்.

அதே கிராம ஊராட்சிக்கு உட்பட்ட பிற கிராமத்தை சேர்ந்தவர். அந்த கிராம ஊராட்சி எல்லையின் அருகில் உள்ள அடுத்த கிராம ஊராட்சியை சேர்ந்தவராகஇருத்தல் வேண்டும்.

காலிப்பணியிடங்களை நிரப்ப விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டுள்ள நகராட்சி மற்றும் நகரப் பஞ்சாயத்துகளில் உள்ள குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே வார்டு அல்லது அருகில் உள்ள வார்டு அல்லது மையம் அமைந்துள்ள வார்டின் எல்லையை பகிர்ந்து கொள்ளும் வார்டை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

காலிப்பணியிடங்களில் விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து காலிப்பணியிட குழந்தை மையம் அமைந்துள்ள ஆலங்குளம் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் மட்டுமே சமர்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ், 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், குடும்பஅட்டை /ஆதார்அட்டை, சாதிச்சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை ஆகிய சான்றிதழ்களின் சுயசான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண் (தாய்/தந்தைஇறப்புசான்று) சான்றிதழ்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் (அடையாள அட்டை) நகல்களையும் சுயசான்றொப்பமிட்டு இணைக்க வேண்டும். நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.


வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் தலைமையில் பொதுமக்களுக்கான சிறப்பு குறை தீர்ப்பு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடம் புகார் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்து தீர்வு வழங்கப்பட்டது. மேலும் பொதுமக்களின் புகார்களை விரைந்து விசாரணை செய்திட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது



தென்காசிதெற்குமாவட்டம்வடகரைபேரூர்பகுதியைசேர்ந்தகல்லூரிமாணவமாணவிகளுக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் கிரிக்கெட் மட்டை, கைப்பந்து, பேட்மிட்டன் பேட் மற்றும் பந்து போன்ற விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.



தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் வடகரை பேரூர் எஸ்டிபிஐ மற்றும் பல்வேறு கட்சிகளில் இருந்து 15க்கும் மேற்பட்ட இளைஞர்கள் முகமது அப்பாஸ் மீரான், சம் சுகுதா முகமது ஜின்னா,செய்யது அகமது, முகமது பாரூக், அக்பர் அலி அசார்,சதாம் உசேன்,அபூபக்கர் சித்திக், சதாம் உசேன், அசாருதீன், கலையரசன்ஆகிய இளைஞர்கள் திமுகவில் இணைந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

# உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட சிறப்பு முகாம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



**கன்னியாகுமரி,மே.22-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படிஉங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் கலெக்டர் ஆர்.அழகுமீனா, அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு தெரிவித்தாவது

மிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கஉங்களை தேடி உங்கள் ஊரில் திட்டமானது செயல்படுத்தப்பட்ட வருகிறது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் இன்று காலை முதல் நாகர்கோவில் இராணி தோட்டம் போக்குவரத்து பணிமனை, ஆசாரிப்பள்ளம் மருந்து கிடங்கு, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனை, ஈத்தாமொழி பகுதியில் அமைந்துள்ள முதல்வர் மருந்தகம், மேலகிருஷ்ணன் புதூர் ஊராட்சிக்குட்பட்ட மணக்காவிளை, பறக்கை குளம், வடக்கு தாமரைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கிற்கு வருகை தந்த பொதுமக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், சாலை சீரமைப்பு, மின்சார வசதி, குடிநீர் இணைப்பு, குளங்களை தூர்வாருதல், பேருந்து வசதி, முதியோர் உதவித்தொகை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், இலவச வீட்டுமனை பட்டா, குடும்ப அட்டையினை வறுமைக்கோட்டுக்கு கீழ் மாற்றுதல், வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்துள்ளார்கள். மேலும் தகுதியான அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து கலெக்டர் ஆர்.அழகுமீனா, உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் நடைபெற்ற ஆய்வு குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் கலந்துரையாடினார்கள்.

நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், திட்ட இயக்குநர் பாபு (ஊரக வளர்ச்சி முகமை), நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சேக் அப்துல் காதர், இணை இயக்குநர்கள் ஜெங்கின் பிரபாகர் (வேளாண்மை), மரு.சகாய ஸ்டீபன்ராஜ் (மருத்துவம்), திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் பத்ஹூ முகம்மது நசீர் இணை பதிவாளர் கூட்டுறவுத்துறை சிவகாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் புஷ்பாதேவி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர்ராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மோகனா, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆறுமுக வெங்கடேஷ், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியில்

# புத்தகத் திருவிழா தொடக்கம்



**கோவில்பட்டி மே 22**

தமிழ்நாடு புத்தக விற்பனையாளர்கள் சங்கம், கோவில்பட்டி வாசகர் வட்டம், எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி, புனித ஓம் கல்வி நிறுவனங்கள், ஆகியவை சார்பில் கோவில்பட்டி காந்தி மண்டபத்தில் 7ம் ஆண்டு புத்தக திருவிழாவின் தொடக்க விழா நடந்தது.

கோவில்பட்டி பழைய பஸ்ஸ்டாண்டு அருகில் உள்ள காந்தி மண்டபத்தில் மே-21ம் தேதி முதல் ஜூன் -4ம் தேதி வரை காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற உள்ள புத்தகத் திருவிழாவில் இலக்கியம். நாவல், போட்டித் தேர்வு புத்தகங்கள், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட 10 ஆயிரம் தலைப்புகளில் 1 லட்சம் புத்தகங்கள் வைக்கப் பட்டுள்ளன. இதில் விற்பனை செய்யும் அனைத்து புத்தகங்களுக்கும் 10% தள்ளுபடி உண்டு. இதில் 26ம் தேதி நான் விரும்பும் ஓவியம் எனும் தலைப்பில் ஓவியப் போட்டியும், 27ம் தேதி நான் வாசித்த புத்தகம் எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும், 28ம் தேதி திருக்குறள் எழுதும் போட்டி உள்ளிட்ட அனைத்து போட்டிகளும் மாலை 4 மணிக்கு நடைபெறும். ஓவியப் போட்டியில் எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களும், மற்ற போட்டிகளில் 5ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களும் பங்கேற்கலாம். புத்தகத் திருவிழாவிற்கு கோவில்பட்டி ரோட்டரி சங்க தலைவர் தாமோதரக் கண்ணன் தலைமை வகித்தார். புனித ஓம் கல்வி நிறுவனங்களின் தலைவர் லட்சுமணப் பெருமாள். எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி முதல்வர் செல்வராஜ், வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு புத்தக விற்பனையாளர்கள் சங்க தலைவர் ரவிவர்மா அனைவரையும் வரவேற்றார். பொன்னுஸ் நேச்சுரல்ஸ் நிறுவனத்தின் சேர்மன் பொன்னுச்சாமி பரஞ்ஜோதி கலந்து கொண்டு புத்தக்கண்காட்சியினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொது தேர்வில் சிறப்பிடம் பெற்ற அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 30 மாணவிகளுக்கு கோவில்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் புத்தக பரிசு கூப்பன் வழங்கப்பட்டது. இதில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் ராஜமாணிக்கம், மாரியப்பன் வீராச்சாமி, தமிழாசிரியை கெங்கம்மாள் உள்பட எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி பேராசிரியர்கள், அரசு பள்ளி மாணவிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் புத்தக விற்பனையாளர்கள் சங்க செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

# கேரள மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் தென்காசி மாணவர்கள் சாதனை



**தென்காசி மே.22**

கேரள மாநிலம் எஸ்ஹெச்எம் இன்ஜினியரிங் காலேஜில் வைத்து நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் தென்காசி மாவட்டத்திலிருந்து நம் சாரல் சிலம்பம் ட்ரைனிங் சென்டர் மாணவர்கள் 35 பேர் கலந்து கொண்டனர்

அதில் 26 பேர் முதலிடமும் 9 பேர் இரண்டாம் இடமும் பிடித்து சாதனை படைத்தனர் . முதல் இரண்டு இடங்களை பிடித்து சாதனை படைத்த நம் சாரல் சிலம்பம் ட்ரைனிங் சென்டர் மாணவர்கள் இதில் 6 முதல் 17 வயது வரை உள்ள மாணவர்கள் சாதனை படைத்தனர் .

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக கேரளா மாநில கல்வித்துறை அமைச்சர் சிவன் குட்டி சிறப்பு விருந்தினராக வருகை தந்தார் .அது மட்டும் இல்லாமல் நம் சாரல் சிலம்பம் ட்ரைனிங் சென்டர் மாணவர்கள் திருச்சியில் நடைபெற்ற சாதனை தமிழர் புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட் என்ற சாதனையை ஒரு மணி நேரம் இடைவிடாமல் சிலம்பம் சுற்றி சாதனை தமிழர் புக் ஆஃப் வேல் ரெகார்ட் என்ற சாதனை நம் சாரல் சிலம்பம் ட்ரைனிங் சென்டர் மாணவர்கள் சாதனை படைத்தனர். போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன்அய்யாசாமி நேரில் சென்று மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தார். உங்களுக்கு தேவையான உதவிகளை வாய்ஸ் ஆப் தென்காசி - தமிழ்நாடு பவுண்டேஷன் உடனிருக்கும் என உறுது கொடுத்தார்.

